2006 டிசம்பர் 7]

## 4. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கைத் தமிழர்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க மத்திய அரசைக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பக்கத்திலே இருக்கிற இலங்கை நாட்டிலே தமிழர்கள் கொடூரத்தனமாக, மிருகத்தனமாகத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, கொன்று குவிக்கப்பட்டு வருவது நாளுக்கு நாள் மிக அதிகமாகி நமக்கெல்லாம் வேதனையையும், மிகப் பெரிய சோதனையையும், அதிர்ச்சியையும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறது. நம்முடைய இந்தியத் திருநாட்டிற்கு இலங்கை அதிபர் திரு. ராஜபக்சே சமீபத்திலே வந்து சென்றார். வந்து சென்ற நேரத்தில், ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டிலே இருக்கிற அரசியல் கட்சிகள், பல்வேறு அமைப்புகள் எல்லாம் எதிர்ப்புத் தெரிவித்துக் குரல் கொடுத்தன.

*பிற்பகல் 12–05*

இந்த ஒட்டுமொத்தமான தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிற வகையில் நம்முடைய உலகத் தமிழினத் தலைவர் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிற கலைஞர் அவர்கள் தொடர்ந்து மத்திய அரசுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆதரவுக் கரம் நீட்ட வேண்டும், அங்கேயிருக்கிற தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவதை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம்.

முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகிற முயற்சி, மேலும் தமிழர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதாகவும், இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும், அங்கேயிருக்கிற தமிழர்கள் மிகுந்த எதிர்பார்ப்போடு நம்பிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள்கூட சமீபத்திலே சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு தமிழ் பன்னிசைப் பெருவிழா நடத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அங்கே சென்றிருந்தோம். 30–க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சியிலே அங்கேயுள்ள இந்தியர் பேரவை, தமிழர் பேரவை, தமிழ் சான்றோர் பேரவை, தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகளெல்லாம் எங்களிடத்திலே சொன்னார்கள். "உலகெங்கும் வாழக்கூடிய

தமிழர்களெல்லாம் உலகத் தமிழினத்தினுடைய தலைவராக இருக்கிற, தாய்த் தமிழ்நாட்டின் முதலமைச்சரின் உதவியை நாங்கள் எதிர்நோக்கி நிற்கிறோம், இக்கட்டான இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தாய்த் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிற, தமிழினத் தலைவராக இருக்கிற, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மனது வைத்தாலொழிய வேறு யாராலும் செய்து முடிக்க முடியாது, தமிழர்களுக்குப் பாதுகாப்பு வராது என்று நாங்களெல்லாம் நம்புகிறோம், தலைவரிடத்திலே சொல்லுங்கள்" என்ற செய்தியை எங்களிடத்திலே சொல்லி அனுப்பினார்கள். ஆகவே, இங்கே குறிப்பிட விரும்புவது, இந்திய நாட்டில் நடைபெற்ற ஆசிய மேயர்கள் மாநாட்டிற்கு ராஜபக்சே வந்த நேரத்தில் நம்முடைய தாய்த் தமிழ்நாட்டினுடைய ஆறு மாநகராட்சி மேயர்கள் பங்கேற்காமல் புறக்கணித்தது தமிழர்களுக்கெல்லாம் பெருத்த மகிழ்ச்சியை அளித்தது. அது வரவேற்கக்கூடியதுதான். ஆனாலும்கூட, இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு வேண்டுகோள் வைத்ததன் எதிரொலியாக, மத்திய அரசினுடைய உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை ஆலோசகர் நாராயணன் அவர்கள் இங்கே வந்து பேசிச் சென்றார்கள். அவரைத் தொடர்ந்து வெளியுறவுத் துறைச் செயலாளர் திரு. சிவசங்கர மேனனும் இங்கே வந்து பேசிச் சென்றார்கள்.

இவர்கள் வந்து பேசிச் சென்ற பிறகு, ராஜபக்சே வந்து செல்லுகின்ற நேரத்திலே 'இந்து' நாளிதழுக்கு ஒரு சிறப்புப் பேட்டியைக் கொடுக்கிறார். அந்தச் சிறப்புப் பேட்டியிலே அவர் சொல்லியிருப்பது "எங்கள் நாட்டுப் போர் விமானங்களின் விமானிகளுக்கு, பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கு, பாதுகாப்புப் படை வீரர்களுக்கு இந்தியா பயிற்சி கொடுத்துப் பேராதரவு அளித்து வருகிறது, இது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது, இந்தப் பயிற்சி மேலும் தொடரும்" என்ற செய்தியை நம்முடைய நாட்டில் 'இந்து' பத்திரிகைக்கு சிறப்புப் பேட்டியிலே கொடுத்துச் சென்றிருக்கிறார். இது இனவெறி பிடித்த சிங்கள அரசுக்கு, ராஜபக்சேவுக்கு மகிழ்ச்சி அளிக்கலாம். ஆனால், நமக்கு இது மிகப் பெரிய வேதனை அளிக்கிறது, கவலை அளிக்கிறது. இந்திய அரசு கொடுக்கக்கூடிய பயிற்சி அவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழர்களுக்கு எவ்வளவு பாதிப்பு அளிக்கிறது? இந்திய அரசு கொடுக்கிற பயிற்சியைப் பெற்ற இலங்கை இராணுவ வீரர்கள், போர்ப் படைத் தளபதிகள், விமான ஓட்டிகள் எல்லாம் இந்தப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டு இந்தியாவிலிருந்து சென்றவுடனே தமிழர்களைக் கொன்று குவிக்கிறார்கள். ஆகவே, தமிழர்களைக் கொன்று குவிப்பதற்காக இந்தியாவிலே பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமா? இங்கே சமீபத்திலே

2006 டிசம்பர் 7] [திரு. ஜி.கே. மணி]

கோவையிலே பயிற்சி கொடுப்பதாக ஒரு செய்தி வந்து, இந்தச் சட்டமன்றத்திலே கிளப்பினோம். முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியினால் அந்தப் பயிற்சி தடை செய்யப்பட்டு, பயிற்சி அளித்தவர்கள் திரும்பப் பெற்றார்கள். அதை நாம் பாராட்டினோம். தமிழ்நாட்டிலே அது நடந்தது. ஆனால், பெங்களூரிலே, பஞ்சாபிலே, ஹரியானாவிலே தொடர்ந்து இப்போது பயிற்சி கொடுத்துக்கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்தவண்ணமாக இருந்துகொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-10

இப்படி நாம் முயற்சி எடுத்துக்கொண்டிருந்தாலும்கூட இலங்கை அரசுக்குப் பாகிஸ்தான் உதவிக்கொண்டிருக்கிறது. இராணுவத் தளவாடங்களை, கருவிகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படி பாகிஸ்தான் கொடுப்பது தமிழர்களின் உயிர்ச் சேதத்திற்கு காரணமாக இருக்கிறது. இப்படி அண்டை நாடுகள் உதவி வரக்கூடிய இந்தச் சூழ்நிலையில், சமீபத்திலே ஐக்கிய நாடுகளின் சுனாமி பேரிடர் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக, தூதுவராக அமெரிக்க நாட்டினுடைய முன்னாள் அதிபர் பில் கிளின்டன் அவர்கள் இங்கே வந்து சென்றார்கள். வந்த நேரத்தில், கடலூரிலே அந்தப் பணிகளையெல்லாம் பார்வையிட்டுவிட்டு, பத்திரிகையாளரிடத்திலே சொல்லிச் சென்று இருக்கிறார். இலங்கை இனப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும். அதைப்போல, போசினியா நாட்டில், வட அயர்லாந்து நாட்டில் ஏற்பட்ட இனச் சிக்கலுக்கு, அண்டை நாடுகளின் உதவியோடு அங்கே நல்ல தீர்வு காணப்பட்டிருக்கிறது. அதைப்போல, இலங்கையிலே ஏற்பட்டிருக்கிற இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமெரிக்க நாட்டினுடைய முன்னாள் அதிபர் பில் கிளின்டன் அவர்கள், இங்கே நம்முடைய தாய் மண்ணிலே, தமிழ் மண்ணிலே இந்தச் செய்தியைச் சொல்லிச் சென்று இருக்கிறர்கள். ஆகவே, இப்படியெல்லாம் இருக்கின்ற சூழ்நிலையில், இந்திய நாடு என்பது இந்தப் பிரச்சினையிலே அக்கறைகொள்ளவில்லை என்ற செய்தி நமக்கு வருத்தமாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரிய முயற்சியைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். எவ்வளவுதான் முயற்சியை எடுத்துக்கொண்டு இருந்தாலும்கூட, இந்திய அரசு இதற்குப் பேராதரவாக இருக்கிறதா என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

[திரு. ஜி.கே. மணி] [2006 டிசம்பர் 7

ராஜபக்சே இந்தியாவுக்கு வந்து சென்ற பிறகுதான், அங்கே கொடூரமான முறையிலே தாக்குதல் நடத்தப்படுகிறது. நார்வே தூதுக் குழுவினர் சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் சென்று வந்து கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது இந்தியா வந்து சென்றவுடன், நார்வே தூதுக் குழுவை அனுமதிக்கமாட்டோம் என்று ராஜபக்சேவே தடை செய்ததாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, அவர் இங்கே வந்தவுடன் பாதிப்பு என்பது அதிகமாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் தாய்த் தமிழ்நாட்டிலே இருக்கிற இந்த மாமன்றத்தில் இதைப் பற்றிப் பேசாமல், பிற மாநிலத்திலே, வேறு நாட்டிலே பேச முடியாது. உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள், தாய்த் தமிழ்நாடு என்ன செய்யப் போகிறது என்று. ஆகவே, நான்கூட இப்போது பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, உங்களுடைய காலத்தில், உங்களுடைய முயற்சியால் இதில் நல்ல தீர்வு ஏற்படவில்லை என்று சொன்னால், எந்தக் காலத்திலும் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியாது. இதை உலக நாடுகளிலுள்ள தமிழர்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

உங்களுடைய தலைமையில், உங்களுடைய முயற்சியால் நல்ல தீர்வு காணப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக, இந்திய அரசு காலக் கெடுவை நிர்ணயிக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக உங்கள் காலத்தில், இந்திய அரசுக்கு வலியுறுத்தக்கூடிய வகையில் ஒரு காலக்கெடு, 3 மாதம் அல்லது 6 மாதம், இந்தக் காலக்கெடுவிற்குள், இந்திய அரசு இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு, ஒரு நல்ல தீர்வினை உருவாக்க வேண்டும் என்று தாங்கள் முயற்சித்தாலொழிய இந்தப் பிரச்சினை தீர்வுக்கு வராது. ஆகவே, இந்த மாமன்றத்தின் வாயிலாக ஒரு தீர்மானத்தைக்கூட நிறைவேற்றி அனுப்பலாம் என்ற வேண்டுகோளையும் நான் முன் வைக்க விரும்புகிறேன்.

ஒட்டுமொத்தமாக, இலங்கைத் தமிழர் பிரச்சினை, முத்தமிழறிஞர், உலகத் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நல்ல வழியைக் காட்டுங்கள். நல்ல தீர்வினை உண்டாக்குங்கள், இது உங்களால்தான் முடியும் என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மீண்டும் மீண்டும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

2006 டிசம்பர் 7]

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமைச் சகோதரர் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மணி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது சில கருத்துகளை இங்கே வெளியிட்டு இருக்கின்றார்கள். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை பற்றி, மத்திய அரசு அக்கறை காட்டவில்லையோ என்ற அச்சத்தை அவர் எழுப்பி இருக்கின்றார். இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்ற பிரச்சினை. இலங்கையிலே இருக்கின்ற தமிழர்கள், நம்முடைய சகோதரர்கள் என்பதிலே யாருக்கும், எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதிலும், அவர்களுக்கு நிரந்தரமாகத் தீர்வு காண வேண்டும் என்பதிலும், இதிலே மத்திய அரசுக்கு தீர்வு காண வேண்டும் என்ற எண்ணம்தான் இருக்கிறதே தவிர, வேறு எண்ணம் இல்லை. அங்கே இருக்கின்ற அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பிற்பகல் 12-15

இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே தலையிட்டுத்தான் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் இங்கே படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. நம்முடைய முதலமைச்சர் அவர்களும் இங்கே பேசுகின்றபோது இலங்கைப் பிரச்சினையை ராஜீவ் காந்திக்கு முன்பு, ராஜீவ் காந்திக்குப் பின்பு என்று இரண்டு நிலையாகக் குறிப்பிட்டு, பல்வேறு இடங்களிலே நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் மத்திய அரசானது இன்றைக்கு இலங்கையிலே இருக்கின்ற தமிழ மக்களுக்கு உதவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அங்கே உணவுப் பொருட்களையும், பால் பவுடர்களையும், மற்ற பொருட்களையும் அனுப்பிக்கொண்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற தமிழர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் மத்திய அரசுக்கு இருக்கின்ற காரணத்தினாலேதான் இப்படிப்பட்ட உணவுப் பொருட்களை எல்லாம் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். உலக நாடுகளிலேயிருந்து பல்வேறு பிரச்சினைகள் மத்திய அரசுக்கு இருக்கின்றன. நாம் அவர்களுக்குப் பயிற்சிகள் கொடுக்கிறோமா, இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், நம்முடைய மணி அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, நாம் உதவாவிட்டாலும்கூட, பக்கத்திலே இருக்கின்ற நம்முடைய அண்டை நாடான பாகிஸ்தான், அவர்களுக்கு உதவுவதற்கு மிகத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, உலக வரலாற்றிலே இன்றைக்கு இந்தியாவினுடைய வளர்ச்சியைப் பொறுக்க முடியாமல் இந்தியாவிலே எப்படியாவது பிரச்சினைகளை

[திரு. டி. சுதர்சனம்] [2006 டிசம்பர் 7

உருவாக்க வேண்டுமென்றும், இந்தியாவுக்குள்ளே பிரச்சினைகளை உருவாக்க வேண்டுமென்றும், வெளிநாட்டு சக்திகள் இந்தியாவை சந்தேகத்தோடு பார்த்துக்கொண்டு இருக்கின்றன. இந்த நிலையில் நாம் எப்படி இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு அணுகுவது, இலங்கையிலே இருக்கின்ற தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பை எப்படித் தேடிக் கொடுப்பது, அவர்களுக்கு எந்தெந்த வழிகளில் எல்லாம் உதவுவது என்பதைப் பற்றி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள், அவர்களிடத்திலே இந்தப் பொறுப்பை நாம் விட்டுவிட்டு, இங்கே இருக்கின்ற சில நண்பர்கள் இலங்கையிலே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பது என்ற பெயரிலே இங்கே இருக்கின்ற பலவேறுபட்ட நண்பர்கள் பலவேறு விதமான அறிக்கைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், அங்கேயிருக்கின்ற தமிழ் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று நாம் விரும்பினால் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலும், மத்திய அரசிலே இருக்கின்ற பிரதமர் மன்மோகன் சிங் அவர்களிடத்திலும், அன்னை சோனியா காந்தி அவர்களிடத்திலும் அந்தப் பொறுப்பை விட்டுவிட்டு நாம் நிம்மதியாக இருப்போமேயானால், நிச்சயமாகத் தமிழர்களுக்கு நல்லதொரு விடிவுகாலம் ஏற்படும் என்று சொல்லி, அமர்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து இங்கே கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், short ஆகச் சொல்லுங்கள். Time ஆகிவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சுருக்கமாகச் சொல்கிறேன். அப்பாவித் தமிழர்கள் அங்கே பாதிக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் மாணவ, மாணவிகள் படுகொலைக்கு உள்ளாவதும், இப்படிப் பல்வேறு காரியங்கள் தொடர்ந்து நடைபெறுவதன் விளைவாக, தமிழர்கள் என்ற உணர்வோடு நமது தமிழ் மண்ணிலே அதற்கான உணர்வுகள் தவிர்க்க முடியாத வகையிலே வெளிப்படுத்தப்படுகிற நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன. குறிப்பாக, அங்கே தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிற தமிழர்கள், பாதிக்கப்பட்ட தமிழர்கள் அகதிகளாகப் பல்லாயிரக்கணக்கில் தமிழகத்திற்கு வந்துகொண்டேயிருக்கிறார்கள். தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான அந்தத் தமிழர்களை இங்கே பாதுகாத்துக்கொண்டு, பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறோம். ஆனால், ஒன்றை மத்திய அரசாங்கத்திற்கு நாம் வேண்டுகோளாக

2006 டிசம்பர் 7] [திரு. வை. சிவபுண்ணியம்]

வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். உலகத்திலே இப்போது ஈராக்கிலே பிரச்சினை வருகிறபொழுது, அதைப் பற்றிக் கண்டிக்கிறோம். அதைப்போலவே, உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலே ஏற்படுகிற மனிதாபிமானமற்ற செயலைக் கண்டிக்கிறோம். அதைப்போலவே, நமது அண்டை நாடாக இருக்கிற இலங்கையிலே நடைபெறுகிற இந்தப் பிரச்சினையைப் பற்றி நமது மத்திய அரசாங்கம் தலையீடு செய்வதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டிய அவசியம் இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். இதிலே மாண்புமிகு காங்கிரஸ் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இதை ஒரு பிரச்சினையாக, தீவிரத்தன்மையுடைய பிரச்சினையாக மாற்றாமல் இருக்க வேண்டும் என்பதிலே எனக்கும் உடன்பாடான கருத்துத்தான். ஆனால், இதற்குரிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி விரும்புகிறது. ஆனால், அதே நேரத்திலே இப்படிப்பட்ட படுகொலைகள் நடப்பதைத் தடுக்க வேண்டும் என்றால், நமது அண்டை நாடு என்ற முறையில் இந்தியாவினுடைய தலையீடு இருக்குமானால், அதற்கு ஒரு முக்கியத்துவம் ஏற்படும் என்றுதான் மற்றவர்கள் கருதுகிறார்கள், தமிழர்கள் கருதுகிறார்கள். இங்கே தமிழகத்திலும் அப்படிப்பட்ட கருத்து வலுவாக இருக்கிறது. அதை மத்திய அரசு தலையீடு செய்து விரைந்த நடவடிக்கையின்மூலமாகத் தீர்வு காண்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்ற கருத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், சொல்லியாகிவிட்டது. எல்லாம் C.M. சொல்லப் போகிறார். C.M. பேசப் போகிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன மணி, சொல்லுங்கள்.

*பிற்பகல் 12–20*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்னதிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார் என்ற அந்தச் செய்தியைச் சொன்னது--நாங்கள் படுகொலைக்கு ஆதரவாகவே பேசவில்லை. உள்ளபடியே அவருடைய படுகொலை குறித்து நாங்கள் வேதனைப்படுகிறோம், வருத்தப்படுகிறோம், அப்படிப்பட்ட ஒரு சம்பவம் தமிழ் மண்ணிலே நிகழ்ந்திருக்கக் கூடாது, அது கண்டிக்கப்பட வேண்டியது, வருத்தப்பட வேண்டியது,

[திரு. ஜி.கே. மணி] [2006 டிசம்பர் 7

ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டுக்கு மிகப் பெரிய சோகத்தையும், அதிர்ச்சியையும் கொடுத்த சம்பவம். அதற்குள்ளே இப்போது நான் செல்லவில்லை. இருந்தாலும்கூட, அகதிகள் அதிகமாக வந்துகொண்டிருக்கிறார்கள். அனாதை விடுதிகளில் பெண்கள், குழந்தைகள் படுகொலை செய்யப்படுகிறார்கள். நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தாய்த் தமிழ்நாட்டில் இருக்கிற நாம் இதற்குக் குரல் கொடுக்க வேண்டும். ஒட்டுமொத்தமாக அண்டை நாடான இந்தியா தலையிட வேண்டும். இதுதான் வேண்டுகோள். பக்கத்து நாடுகள் அவர்களுக்கு ஆதரவு அளித்துக்கொண்டிருக்கின்றன. நார்வே நாடு வருகிறது. தமிழர்கள் வாழக்கூடிய, தாய்த் தமிழ்நாடான, இந்தியாவில் இருக்கிற தாய்த் தமிழ்நாட்டுத் தமிழர்கள், முதலமைச்சர் குரல் கொடுக்காமல் யார் கொடுக்க முடியும்? ஆகவே, மத்திய அரசை வேண்டிக்கொள்கிறோம், நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் வாயிலாக இது நிறைவேற வேண்டும் என்று விருமபுகிறோம். இதுதானே தவிர, இந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தாமல், விரிசலாகக் கொண்டு செல்லாமல், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் உணர்வு, ஒட்டுமொத்தத் தமிழினத்தினுடைய உணர்வு என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல அரசியல் தீர்வினை உண்டாக்க வேண்டும், ஒரு சுமுகத் தீர்வு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வர வேண்டும் என்ற வேண்டுகோளே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதைச் சொல்லி அமைகிறேன். நன்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. ஹசன் அலி, என்ன சொல்லப் போகிறீர்கள்? எல்லோரும் விரிவாகப் பேசிவிட்டார்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் சுதர்சனம் பேசிவிட்டார். நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள்? உட்காருங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** நான் ஒரே ஒரு விஷயம் சொல்கிறேன் சார். நான் இராமநாதபுரம் தொகுதியைச் சேர்ந்தவன். அகதிகள் வருகை இராமநாதபுரத்திலே இப்போது 17,000-ஐத் தாண்டிவிட்டதாலும், இந்தப் பிரச்சினையில் அக்கறை உள்ளவன் என்பதாலும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விஷயத்தைச் சொல்லுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** சமீபத்திலே இலங்கையினுடைய அதிபர் டெல்லி வந்திருந்தபோது என்னை சிறப்பு அழைப்பாளராக அழைத்து, என்னை அவரோடு தங்க வைத்து, இரண்டு நாட்கள் அவரோடு

2006 டிசம்பர் 7] [திரு. கு. ஹசன் அலி]

இருந்திருக்கிறேன். ஆகையால், இந்தப் பிரச்சினையில் நான் பேசுவது பொருத்தமாக இருக்கும். ஆகையால், என்னை allow பண்ணுங்கள். தயவுசெய்து கோபித்துக்கொள்ளாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹசன் அலி, விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கு. ஹசன் அலி:** நம்முடைய தமிழகத்திலே இருந்து—நான் ஏற்கெனவே கலைஞர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்—ஒரு குழு அமைத்து, கலைஞர் அவர்கள் அமைத்து, கலைஞர் அவர்கள் அனுமதியுடன் அவர்களைச் சந்தித்தால் நம்முடைய கருத்துகளை நாம் அங்கே எடுத்து வைப்பதற்கு ஏதுவாக அமையும். அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இதற்கு முன்னரல் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார், ஒட்டுமொத்தமாகத் தமிழகத்திலே நம்முடைய வெறுப்பை நாம் தெரிவித்திருக்கிறோம் என்று. அதனால் என்ன பிரயோஜனம் தமிழர்களுக்கு? தமிழகத்திற்கு அகதிகளாக வந்திருக்கிறார்களே 16 ஆயிரம் பேர், அவர்களுக்கு எங்களுடைய சொந்தச் செலவில் உணவு, உடை எல்லாம் நாங்கள் கொடுத்திருக்கிறோம். இப்போது கொடுத்துக் கொண்டிருக்கும்போது இந்தப் பிரச்சினையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, தினசரி ஒரு துப்பாக்கிச் சூடு அங்கே நடந்துகொண்டிருக்கிறது. ஒரு நாள் விட்டு ஒரு நாள் மீனவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம், கச்சத்தீவுக்கும் இராமநாதபுரத்திற்கும் இடையில் நடந்துகொண்டிருக்கிறது. அவர்களை எல்லாம் மதுரை ஆஸ்பத்திரியில் நாங்கள் பார்த்தோம். நம்முடைய தலைவர் அவர்களுக்கு எழுதியிருக்கிறேன், கலைஞர் அவர்களுக்கு எழுதியிருக்கிறேன். உடனடியாக இதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், ஒரு வேண்டுகோளைத்தான் நான் வைக்கிறேன். இந்திய அரசாங்கத்திலே இது சரி வராது என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மீண்டும் அந்த வேண்டுகோளை வைக்கிறேன். இந்திய அரசாங்கத்தினுடைய ரோந்துப் படைகளும், இலங்கை அரசாங்கத்தினுடைய ரோந்துப் படைகளும் ஒன்றாக அந்த இடத்திலே ரோந்து செய்வார்களேயானால், இந்தத் துப்பாக்கிச் சூட்டை நிறுத்த முடியும். ஏனென்றால், இப்போது daily இரண்டு பேரும் சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை நான் அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, இலங்கைத் தமிழர் பிரச்சினையில், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், தமிழருடைய பிரச்சினையில் யாரும் பின் சாய்ந்து இருக்கவில்லை. எல்லோரையும்விட முன்னால்தான் நாங்கள் நிற்கிறோமேயொழிய, யாருக்கும் நாங்கள் பின் சாய்ந்து இருக்கவில்லை. மத்திய அரசாங்கமும் யாருக்கும் பின் சாய்ந்து இருக்கவில்லை. ஏனென்றால், அன்னை சோனியா

[திரு. கு. ஹசன் அலி] [2006 டிசம்பர் 7

அவர்களும், மன்மோகன் சிங் அவர்களும் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். இதில் என்ன முடிவுக்கு வர வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்சினையில் கலைஞர் அவர்களுக்கு மறுபடியும் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன். இந்தப் பிரச்சினை மிகச் சிக்கலான பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் நீங்கள் ஒரு குழு அமைத்து இதைப் பற்றி நீங்கள் பேச வேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

பிற்பகல் *12–25*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மான வடிவில் இந்தப் பேரவையின் உறுப்பினர்களுடைய எண்ணங்களைத் தொகுத்து, மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற கருத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் திரு. மணி அவர்கள் இங்கே வெளியிட்டிருக்கின்றார்கள். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் சுதர்சனம் அவர்களும், இலங்கையில் நடைபெறுகின்ற அட்டூழியங்கள் எதையும் மறைக்காமல், ஆனால், இதையெல்லாம் சமாளிக்கின்ற அல்லது சந்திக்கின்ற அல்லது அகற்றுகின்ற அந்தப் பொறுப்பை மத்தியிலே இருக்கின்ற பிரதமர் அவர்களும், திருமதி சோனியா காந்தி அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்திருக்கின்றார்கள்.

இங்கே ஆற்றிய உரைகள் அனைத்தும், யாரையும் நம்பாமல் ஆற்றப்பட்டவை அல்ல. இந்தப் பிரச்சினை ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் இன்னும் சூடாக, கொதிப்பாக வெளியிடப்பட்டபோது, நான் அதற்குப் பதில் அளித்து ஆற்றிய உரையில் குறிப்பிட்ட எந்த வாசகத்தையும் நீங்கள் மறந்திருக்க முடியாது. அதையேதான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால், அதையே திரும்பத் திரும்ப நினைவுபடுத்தி, பிரச்சினையைத் தட்டிக் கழிக்கவோ அல்லது அங்கே செத்துக்கொண்டிருக்கின்ற தமிழர்களை மேலும் சாகவிடவோ நான் விரும்பமாட்டேன் என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும்.

இலங்கைத் தமிழர்களுடைய, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வு எப்படியெல்லாம் கடந்த சில நாட்களாக வெளிப்படுத்தப்படுகிறது என்பதை நான் கடந்த சில நாட்களுக்கு முன்பு டெல்லிக்குச் சென்றிருந்தபோதுகூட, திருமதி சோனியா காந்தி அவர்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றேன். இப்போதும், வாய்ப்பு ஏற்பட்டால்

2006 டிசம்பர் 7] [கலைஞர் மு. கருணாநிதி]

டெல்லியிலே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மணி அவர்களானாலும், மற்றும் அவர்களுடைய தலைவர், பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் தலைவர் டாக்டர் அவர்களானாலும், இதை நான்தான் செய்ய முடியும், தமிழக முதலமைச்சரால்தான் செய்ய முடியும் என்கிறபோது, அவர்கள் முதலமைச்சர் என்கின்ற பதவி இருக்கின்ற காரணத்தினால் முடியும் என்று கருதுகிறார்களா? அல்லது கருணாநிதியாலேயே முடியும் என்று அவர்கள் கருதுகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

கிளின்டன் அவர்கள் இங்கே வந்து பேசியதைக்கூட நம்முடைய மணி அவர்கள்--மணி அவர்கள்தான் என்று நினைக்கின்றேன்--இங்கே குறிப்பிட்டார்கள். கிளின்டன் எப்போது பேசுகிறார்? அமெரிக்க அதிபராக இல்லாதபோது பேசுகிறார். அவர் அமெரிக்க அதிபராக இருந்தாரே, அப்போது அமெரிக்க ஏகாதிபத்தியம் அவரைப் பேசவிட்டதா? அதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, ஒரு பொறுப்பு கிளின்டனுக்கு இருந்தபோது, அதைப் பற்றி அவர் பேசவில்லை. பேசாததற்குக் காரணம், அவருடைய மனதிலே, தயவு தாட்சண்யம் இல்லை, இரக்கம் இல்லை என்று யாரும் கருதக் கூடாது. எல்லாம் இருந்தது. இருந்தாலும், எந்த அளவிலே பயன்படுத்த வேண்டுமென்ற ஒரு நெருக்கடியும் அவருக்கு இருந்த காரணத்தினால், அப்போது பேசவில்லை. இப்போது புஷ் இருக்கிறார். பேசவில்லை. இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்குப் பிறகு, அவர் இந்தியாவுக்கு வந்தால் பேசுவார். ஆனால், அந்த இரண்டு ஆண்டு காலமும் இலங்கைப் பிரச்சினை நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறவன் அல்ல நான். விரைவிலே முடிய வேண்டும் இந்தப் பிரச்சினை என்றுதான் நான் விரும்புகின்றேன்.

இதற்கிடையிலே, தமிழ்நாட்டிலேயுள்ள மக்கள், அவர்கள் மாணவர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும், வழக்கறிஞர்களாக இருந்தாலும், கவிஞர்களாக இருந்தாலும், கலையுலகப் பெருமக்களாக இருந்தாலும், தொழிலாளர்களாக இருந்தாலும், அரசியல்வாதிகளாக இருந்தாலும், அத்தனை பேரும் தங்களுடைய உணர்வுகளை இன்றைக்கு வெளிப்படுத்தி, ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாநோன்புகள், இவையெல்லாம் தமிழகத்தில் தினந்தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 டிசம்பர் 7

*பிற்பகல் 12–30*

அவை மத்தியிலே இருப்பவர்களுக்குத் தெரியாமல் இல்லை. மத்தியிலேயிருந்து வருகின்ற அதிகாரிகள், இலங்கைக்குச் சென்று திரும்பிய அதிகாரிகள், வெளியுறவுத் துறை செயலாளர் போன்றவர்கள் என்னைச் சந்தித்தபொழுதும் அவர்களிடத்திலே இவற்றையெல்லாம் முழுமையாக நான் விளக்கியிருக்கின்றேன். வாய்ப்பு ஏற்படும்பொழுதெல்லாம் டெல்லியிலே உள்ளவர்களைச் சந்தித்தாலோ அல்லது அவர்கள் இங்கே வரும்பொழுது அவர்களைச் சந்திக்க நேர்ந்தாலோ, இதை விளக்கிக்கொண்டு இருக்கின்றேன். இத்தனைக்கும் பிறகு சட்டசபையிலேயே ஒரு தீர்மானம் நிறைவேற்றினால் என்ன என்ற அந்தத் துடிப்பு, நம்முடைய நண்பர் மணி போன்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இருக்கின்றது.

மணி அவர்கள் இதை அணுகுகிற அதே கோணத்திலே நம்முடைய அன்பிற்குரிய சுதர்சனம் அவர்கள் அணுகுவாரா என்றால், இல்லை. உணர்வைப் பொறுத்தவரையிலே அணுகுகிறார்கள். ஆனால், வேறு சில விஷயங்களில், பிரச்சினைகளில் எல்லோரும் ஒரே மாதிரி அணுக முடியாதுதான். அதைப்போல, நம்முடைய கோவிந்தசாமி அவர்கள் அணுக முடியாது. நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் அணுக முடியாது. இவர்கள் அணுகுவதைவிட இன்னும் வேகமாக அணுகக்கூடியவர்கள் நம்முடைய விடுதலைச் சிறுத்தைகள். அவர்கள் அணுகுவார்கள். எனவே, இந்த மாமன்றத்திலே வீற்றிருக்கிற நாமே இதை அணுகுகின்ற முறையில் வேறுபடுகின்றோம். மாறுபடுகின்றோம் என்பதல்ல; வேறுபடுகின்றோம். ஒவ்வொருவருக்கும் இலங்கையிலே இருக்கிற தமிழர்கள் வாழக் கூடாது என்கின்ற மாறுபாடான எண்ணம் கிடையாது. ஆனால், அவர்களை எப்படி வாழ வைப்பது, எப்படிக் காப்பாற்றுவது என்பதிலே வேறுபட்ட எண்ணங்கள் இருக்கின்றன; வேறுபட்ட முறைகள் இருக்கின்றன. எந்த முறையிலே அதைக் கடைப்பிடிக்கலாம் என்பதிலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் ஆர, அமர யோசித்துப் பார்த்துதான் ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

ஆளும் கட்சியிலே இருக்கின்றோம் நாங்கள். நாளைக்கே இதை விட்டுவிட்டு வரச் சொல்கிறீர்களா, வருகிறோம். வந்தால், மறுநாள் தமிழ் ஈழம் கிடைத்துவிடும்; வாருங்கள் என்று சொன்னால், நாங்கள் வருவதற்குத் தயாராக இருக்கிறோம். வந்தாலும் கிடைக்காது என்றால் இதை விட்டு என்ன பலன்? இதை விட்டதுதான் பலனாக இருக்கும். சில பேருக்குப் பலனாக இருக்கலாம். தொலைந்தார்கள் பாவிகள் என்று, சில பேருக்குப் பலனாக இருக்கலாம். ஆகவே, எதைச் செய்தால் தமிழ் ஈழம் கிடைக்கும் என்றோ அல்லது அங்கே இருக்கின்ற தமிழ்

2006 டிசம்பர் 7] [கலைஞர் மு. கருணாநிதி]

மக்கள், அவர்கள் வாழ முடியும் என்றோ நாம் கருதிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும், நாம் செய்ய வேண்டிய முயற்சிகளை, எடுக்க வேண்டிய முயற்சிகளை எடுத்துத்தான் தீர வேண்டும். அது நம்முடைய உணர்வோடு கலந்தது; உதிரத்தோடு கலந்தது; நம்முடைய உயிர் மூச்சோடு கலந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தமிழர்களுக்காக நாம் பாடுபடத்தான் வேண்டும். ஆகவே, இங்கே நாம் தனியாக ஒரு தீர்மானமாகப் போட்டு, மத்தியிலே இருப்பவர்களுக்கு ஒரு நெருக்கடியை உண்டாக்க வேண்டிய அவசியம் இல்லை; நாமும் நெருக்கடிக்கு ஆளாக வேண்டிய தேவை இல்லை. ஆகவே, ஒரு தீர்மான வாசகமாகவே நான் அதை எழுதிப் படித்துத் தீர்மானம் என நிறைவேற்றுவதைவிட, ஒரு வாசகமாகவே சொல்கிறேன். அதைத் தீர்மானமாக ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

"இலங்கையிலே, தமிழ் மக்களின் உயிர் உடைமைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை மேலும் மோசமான அளவில் தொடர்வதற்காக இந்தச் சட்டப் பேரவை ஆழ்ந்த வேதனையைத் தெரிவிப்பதோடு, இதற்கு ஒரு முடிவினைக் காண, இலங்கைத் தமிழர்கள் அனைத்து உரிமைகளும் பெற்று அமைதியாக வாழ்ந்திட, இந்தியப் பேரரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இப்பேரவை இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது."

என்னும் இந்தத் தீர்மானம் (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் பொதுவான தீர்மானமாக அமையும் என்று கருதி, இதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த subject-க்குப் போயாகிவிட்டது. விடுங்கள். (குறுக்கீடு) மணி, நிறைய Bills இருக்கின்றன. Time நிறையத் தேவைப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள், கோவிந்தசாமி. நிறைய time தேவைப்படுகிறது.

**திரு. சி. கோவிந்தசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **

*பிற்பகல் 12–35*

## 5. கவன ஈர்ப்பு

### வேட்டைக்காரன்புதூர் மற்றும் சேத்துமடை அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் மற்றும் சேத்துமடை அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்களை நியமித்து, பள்ளிகளுக்குக் கழிப்பிடம் மற்றும் தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

### அறிக்கை

பொள்ளாச்சி கல்வி மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட/காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்கள் பின்வருமாறு:–

| | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | காலியாகவுள்ள பணியிடங்கள் |
|---|---|---|
| தலைமை ஆசிரியர் | 1 | – |
| முதுகலை ஆசிரியர்கள் | 5 | 1 |
| பள்ளி உதவி ஆசிரியர்கள் | 5 | 1 |

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது